23.04.2025 S.C.No.138 of 2017 P.W.51 – Govindhasamy

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

(A1 and A6 absent. And their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A2 to A5 present)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 03.45 P.M.**

**5 மற்றும் 6 ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: வழக்குக்கோப்பை பெற்றுக்கொண்டு நான் விசாரணையை தொடங்கினேன் என்று சொல்லியுள்ளேனா என்றால்?

ப: புகார் மனு பெற்றுக்கொண்டு வழக்கு பதிவு செய்து விசாரணையை தொடங்கினேன். வழக்குக்கோப்பை பெற்றுக்கொண்டு விசாரணையை தொடங்கினேன் என்றால் சரியல்ல.

கே: புகார் மனுவை பெற்றுக்கொண்டுதான் விசாரணையை தொடங்கினீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: தாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்குதான் விசாரணை அதிகாரியாக நியமித்தார்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக நான் இருந்தேனா என்றால்?

ப: 26.06.2015 ம் தேதி இரவு 10.00 மணி முதல் 01.07.2015 ம் தேதி இரவு 10.00 மணி வரை விசாரணை அதிகாரியாக நான் இருந்தேன்.

கே: 26.06.2015 முதல் விசாரணைக்கு மட்டும் நியமிக்கப்பட்டேன். பள்ளிக்கொண்டா காவல் நிலையம்தான் எனக்கு பொறுப்பு என்றால்?

ப: சரிதான். பணி நியமனம் செய்யப்பட்டு வழக்கு தொடர்பாக விசாரணை செய்தேன்.

கே: இந்த வழக்கில் விசாரணைக்காக பொறுப்பு கொடுக்கப்பட்ட ஆய்வாளர் என்றால்?

ப: வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பொறுப்பு எனக்கு கொடுக்கப்பட்ட 26.06.2015 முதல் 01.07.2015 வரை விசாரணை அதிகாரியாக இருக்கும் நேரத்தில் தங்களிடம் Inspector dairy இருக்க வேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த தேதியில் Inspector dairy ஐ சிபிசிஐடி என்னை விசாரிக்கும்போது நான் கொடுத்தேனா என்றால்?

ப: இல்லை.

கே: General Dairy வேறு Case Dairy வேறு என்றால் ?

ப: சரிதான்.

கே: Case Dairy ல் நான் விசாரணை செய்த அனைத்து விஷயங்களும் குறிப்பிடப்பட்டு அது நீதிமன்றத்தில் கொடுக்கப்பட வேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: Case Dairy–ஐ விசாரணையின்போது நான் சிபிசிஐடியிடம் கொடுத்தேனா என்றால்?

ப: கொடுத்தேன்.

கே: Case Dairy –யோடு நான் விசாரிக்கும் அனைத்து விவரங்களையும் தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்களைGap CD ல் பதிவு செய்ய வேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: GD, Rough Duty Roaster ஆகியவை என் முன்னிலையில்தான் கைப்பற்றப்பட்டது என்றால்?

ப: சரிதான்.

கே: ஜிடியில் உள்ள அனைத்து விஷயங்களும் எனக்கு முழுமையாக தெரிந்திருக்க வேண்டும் என்றால்?

ப: சரிதான். அனைத்து விஷயங்களையும் ஞாபகத்தில் வைத்திருக்க சாத்தியமில்லை.

கே: GD, Rough Duty Roaster ல் 16.06.2015 முதல் 19.06.2015 வரை காவல் நிலையத்தில் பணிபுரிந்தவர்கள் பற்றி விஷயங்கள் கண்டிப்பாக தங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்றால் ?

ப: சரிதான். 26.06.2015, 27.06.2015 ஆகிய தேதிகளில் ஆம்பூர், பள்ளிக்கொண்டாவில் கலவரமாக இருந்ததால் எனக்கு ஞாபகமில்லை.

கே: கலவரம் நடந்தபோது பந்தோபஸ்துக்காக அனுப்பப்பட்ட காவலர்களை யார் நியமித்தது யார் யாரை நியமித்தார்கள் என்றால்?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: அது பற்றி தங்களுக்கு தெரியாததற்கான காரணம் தாங்கள் முழுமையாக பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணியில் இருந்தது என்றால்?

ப: சரியல்ல.

கே: வேறு என்ன பணி செய்தீர்கள்?

ப: பாதுகாப்பு பணி மற்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணி.

கே: தாங்கள் விசாரணை அதிகாரி என்ற பொறுப்பு மட்டும்தான் தங்களுக்கு தரப்பட்டது அந்த நிலையில் ஏனைய பணிகளை செய்ய மேல் அதிகாரிகளின் உத்தரவின்படிதான் தாங்கள் சென்றிருக்க முடியும். அப்படி சென்றிருந்தால் அந்த உத்தரவு தொடர்பான குறிப்புகளின் ஆவணங்களை தங்களை விசாரித்த சிபிசிஐடியிடமோ அல்லது நீதிமன்றத்திலோ தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால்?

ப: நான் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்தபோது அவ்வப்போது மேல் அதிகாரி வாய்மொழி உத்தரவின்படி மற்ற பணிகளுக்கும் செல்ல வேண்டியது இருந்ததால் பணிகளுக்கு சென்றேன்.

கே: சிபிசிஐடி தங்களை விசாரிக்கும்போது என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் எனக்கு அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவின்படி வேறு பணிகளை செய்யச்சொன்னார்கள் என்று சொன்னீர்களா?

ப: இல்லை.

கே: தாங்கள் விசாரணையில் த.கா.257 அனுமந்தனின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் 16.06.2015 ம் தேதியும் 19.06.2015 ம் தேதியும் திரு.ரவி சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவர் ஷமீல் பாஷாவை அனுப்பி வைத்தார் என்று கூறியுள்ளார் என்றால் ?

ப: சரிதான்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நான் பணியாற்றிய 26.06.2015 முதல் 01.07.2015 வரை விசாரணை அதிகாரியாக நான் இருந்த காலத்தில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பணியாற்றிய எந்த பணியாளர்களையும் நான் விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரியல்ல. த.கா.257 அனுமந்தனை விசாரித்தேன்.

கே: தங்களால் கூறப்படும் 15.06.2015 முதல் 19.06.2015 வரை அப்போது பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பணியாற்றிய அனுமந்தனை தவிர மற்றவர்களை விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: அதுபோல குற்றம் சாட்டப்படிருக்கின்ற 1 முதல் 6 எதிரிகள் 16.06.2015 முதல் 19.06.2015 வரை எங்கெங்கு பணியாற்றினார்கள், யாரால் Special Team மற்றும் Shadow Duty ல் பணியமர்த்தப்பட்டார்கள், அவர்கள் எந்த எந்த பணிகளில் இருந்தார்கள் என்று தாங்கள் விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: கலவரம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு டிஐஜி அவர்களால் பந்தோபஸ்துக்காக இருதயராஜ், பாபு ரவிசந்திரன் போன்றவர்கள் அனுப்பப்பட்டார்கள். அதனால் பந்தோபஸ்து பணிக்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: மேலும் தாங்கள் 26.06.2015 முதல் 01.07.2015 வரை விசாரணை அதிகாரியாக பள்ளிக்கொண்டா காவல் நிலைய அந்த பணியில் மட்டும் பணியாற்ற அதிகாரிகளால் வாய்மொழி உத்தரவால் நியமிக்கப்பட்டீர்களே தவிர பந்தோபஸ்து பணிக்கு

நியமிக்கப்படவில்லை என்றும் தாங்கள் செல்லவில்லை என்றும் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ?

ப: சரியல்ல.

கே: தாங்கள் விசாரணை செய்யும்போது Movement Register அல்லது Dairy ல் பந்தோபஸ்துக்கு சென்றதற்கான ஆவணங்களை சிபிசிஐடி விசாரணையின்போதோ அல்லது நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: தாங்கள் பொறுப்பு எடுத்தது Custodial Death என்ற விஷயத்திற்காக என்றால் ?

ப: சரிதான்.

கே: Custodial Death என்று உங்களால் சொல்லப்படும் இந்த வழக்கில் Arrest Card மற்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் Lock up–ல் வைத்ததற்கான தகவல்களை நீதித்துறை நடுவர் விசாரணையில் சமர்ப்பித்தோமா என்றால்?

ப: இல்லை. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் புகார் மனுவில் பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் மார்டின் மற்றும் காவலர்கள் அழைத்து வந்து அடித்து துன்புறுத்தியதால் ஷமீல் பாஷா இறந்தார் என்று புகார் மனுவில் உள்ளது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 16.06.2015 முதல் 19.06.2015 வரை SHO யார் என்றால்?

ப: எஸ்எஸ்ஐ ரவி, சிங்காரம், கலைச்செல்வன் ஆகியோர் மாறி மாறி ஜிடி பொறுப்பில் இருந்தார்கள்.

கே: FIR பதிவு செய்த பிறகு அந்த வழக்கு சம்பந்தமான விஷயங்கள் நீதிமன்றத்தில் அது சம்பந்தமாக சந்தேகம் ஏற்பட்டு வினவும்போது ஜிடியில் உள்ள Reference ஐ நாங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்புவது வழக்கம் என்றால்?

ப: சரிதான்.

கே: FIR பதிவு செய்த பிறகு மேற்படி மார்டின் காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் ஆகியோர்களை பற்றிய விவரங்கள் ஜிடி என்ட்ரியில் பதிவு செய்திருக்க வேண்டும். அப்படி பதிவு செய்யப்பட்டதை தாங்கள் பார்த்தீர்களா?

ப: இல்லை.

கே: சிபிசிஐடி விசாரணை நடத்தும் வரை தாங்கள் ஜிடியை பார்க்கவில்லை என்றால்?

ப: 01.07.2015 அன்று சிபிசிஐடியால் ஜிடி கைப்பற்றப்பட்டது.

கே: 26.06.2015 முதல் 01.07.2015 வரை தாங்கள் விசாரணை அதிகாரியாக இருந்தபோது 15.06.2015 முதல் 01.07.2015 வரை ஜிடி என்ட்ரியில் மார்டின் ஆய்வாளர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எதிரியின் பெயர்கள் இருந்தனவா என்று விசாரணை அதிகாரி என்ற அந்தஸ்தில் பார்த்தீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: FIR பதிவு செய்தவுடன் ஜிடி என்ட்ரி போட வேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: இந்த வழக்கில் குறிப்பிட்டு விசாரணை செய்ய தங்களை அனுப்பினார்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: தாங்கள் விசாரணை அதிகாரியாக இருந்தபோது முதல் தகவல் அறிக்கை தயார் செய்தவுடன் அது சம்பந்தமாக ஜிடியில் Reference எழுதினீர்களா?

ப: ஜிடியில் பதிவு செய்தேன்.

கே: அ.த.சா.ஆ.82 தங்களால் குறியீடு செய்யப்பட்டதா என்றால்?

ப: ஆம்.

கே: அ.த.சா.ஆ.82 ல் இருக்கும் எ.ம.த.சா.ஆ.5 என்ற ஆவணத்திற்கு யார் Custodian என்றால் ?

ப: நான்தான். அது ஆம்புர் நகர காவல் நிலையத்திலிருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு பெறப்பட்டது.

கே: மேற்படி விவரத்தை ஜிடி என்ட்ரியில் பதிவு செய்தீர்களா ?

ப: பதிவு செய்யவில்லை.

கே: மேற்கண்ட எ.ம.த.சா.ஆ.5 ல் வழக்கு எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டுள்ளாரா என்றால் ?

ப: குறிப்பிடப்படவில்லை.

கே: தாங்கள் கூறிய இரண்டாவதாக பெறப்பட்ட மனுவின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளை பற்றி குறிப்பிட்டிருக்கிறேன் என்று கேள்விப்பட்டவுடன் அவர்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அந்த குறிப்பிட்ட தேதிகளில் பணியில் இருந்தார்களா என்பதை ஜிடி மூலமாகவோ, சென்ட்ரி புக், டியூட்டி ரோஸ்டர் ஆகியவற்றை தாங்கள் பார்த்தீர்களா, அந்த ஆவணங்களை கைப்பற்றினீர்களா?

ப: இல்லை. என்னிடம் முதலில் கொடுக்கப்பட்ட முதல் புகார் மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கே: அ.த.சா.ஆ.82ல் முதல் பக்கத்தில், 16 வது வரிசையில் அலி அக்பர் கொடுத்த முதல் புகார் மனு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான். அவை ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்ட மனு ஆகும்.

கே: 26.06.2015 அன்று எ.ம.த.சா.ஆ.5 குறியீடு செய்யப்பட்ட அந்த ஆவணம்தான் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆவண வரிசையில் 16 வது எண் என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட ஆவணத்தில் எதிரிகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: தங்களுக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் மட்டும்தான் பணியமர்த்தப்பட்டது, கலவரப்பகுதியில் எந்த ஒரு பணியும் நியமிக்கப்படவில்லை என்பதால் தங்களுக்கு எந்தவித படபடப்பும் ஏற்பட வேண்டிய அவசியமில்லை, இந்த வழக்கில் விசாரணை அதிகாரியாக மட்டுமே தாங்கள் இருந்தீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: இந்த வழக்கின் விசாரணைக்காக தாங்கள் பணியமர்த்தப்பட்டதற்கான ஆவணமோ அல்லது பந்தோபஸ்து பணிக்கு தாங்கள் சென்றதற்கான ஆவணமோ சிபிசிஐடி விசாரணையிலோ மட்டும் நீதிமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: நீதித்துறை நடுவருக்கு அனுப்பப்பட்ட மனுவின் அடிப்படையில் புகார் மனு போடாமல் தாங்கள் நீதிமன்றத்தை ஏமாற்றுவது மட்டுமின்றி அரசியல்வாதிகளின் தூண்டுதலின் அடிப்படையில் எதிரிகளை திட்டமிட்டு இந்த வழக்கில் இணைப்பதற்காக பொய் புகார் ஒன்றை வாங்கி அதன் அடிப்படையில் ஒரு Fabricated FIR ஐ உருவாக்கி நீதிமன்றத்திற்கு தவறான தகவலை கொடுத்திருக்கிறீர்கள் என்றால்?

ப: அதை நான் மறுக்கிறேன்.

கே: 26.06.2015 முதல் 01.07.2015 வரை தாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராக இருந்தபோது அங்கு உள்ள ஆவணங்கள் எதிலாவது கையெழுத்திட்டதை சிபிசிஐடியிடமோ நீதிமன்றத்திலோ தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: செய்துள்ளேன். 26.06.2015 ம் தேதி இரவு 10.00 மணிக்கு பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன்.

கே: நீதித்துறை நடுவருக்கு அனுப்பிய அலி அக்பர் என்பவருடைய மனு (எ.ம.த.சா.ஆ.5) என்பதன் அடிப்படையில் ஜிடியில் தாங்கள் அந்த Reference ஐ குறித்தீர்களா?

ப: இல்லை.

கே: DIG, SP மூலமாக Special Duty மற்றும் Shadow Duty ல் எதிரிகள் பணியமர்த்தப்பட்டிருந்தால் அவர்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணியில் இல்லை, மேலும் அது சம்பந்தமாக ஜிடி என்ட்ரி எதுவும் இல்லை, 15.06.2015 முதல் 19.06.2015 வரை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அவர்கள் பணியாற்றவில்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: 5ம் எதிரி 17.06.2015 ம் தேதியன்று விடுப்பில் சென்றிருக்கிறார் மற்றும் 18.06.2015, 19.06.2015 ஆகிய தேதிகளில் பாபு ரவிச்சந்திரன் என்ற ஆய்வாளருடன் குற்ற எண் 206/2015 என்ற வழக்கின் வேலூர் ஓட்டேரி பகுதியில் 4ம் எதிரியுடன் ஆய்வுகள் மேற்கொண்டிருந்தனர் என்ற விஷயம் தங்களுக்கு தெரியுமா, தெரியாதா?

ப: தெரியாது.

கே: மேலும் 6ம் எதிரி சுரேஷ் செம்மரக்கட்டை வழக்கு சம்பந்தமாக ஜவ்வாதுமலைக்கு 18.06.2015 ம் தேதி சென்றுவிட்டார் என்ற விவரம் தங்களுக்கு தெரியுமா, தெரியாதா?

ப: தெரியாது.

கே: எனவே தங்களுக்கு FIR ஐ பதிவு செய்ததை தவிர வேறு ஒன்றும் தெரியாது தாங்கள் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்?

ப: சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.25 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.23 17:36:45 +0530